<u>**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**</u>

**MCOP 340/2018** **நாள்.05.09.2024**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ம் நாள் மனுதாரர் தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடாஜலம் | தொழில் | |
| த.பெ/க.பெ. | கன்னிக்கவுண்டர் | சாதி | |
| கிராமம் | செஞ்சி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 67 |

<u>**ம.சா.1**</u>

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில் **1-ம்** சாட்சி ஆவேன். நான் ம.**சா.1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>**ஆவணங்கள்**</u>

1. ம.த.சா.1 - முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல்
2. ம.த.சா.2 மனுதாரரின் குடும்ப அட்டை நகல்
3. ம.த.சா.3 மனுதாரரின் இறந்த மகனின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)
4. ம.த.சா.4 மனுதாரரின் இறந்த மகனின் பிரேத பரிசோதனை சான்றிட்ட நகல்
5. ம.த.சா.5 மனுதாரரின் இறந்த மகனின் East wind footwear companyல் பெற்ற சம்பள இரசீது கணினி நகல்.
6. ம.த.சா.6 மனுதாரரின் இறந்த மகனின் 07.12.2015 தேதியிட்ட பணி நியமன கடித அசல்
7. ம.த.சா.7 மனுதாரரின் இறந்த மகனின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல்
8. ம.த.சா.8 மனுதாரரின் இறந்த மகனின் Provisional Certificate

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)